DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 108 /2023**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | சுலோச்சனா | Husband Name – | ராமசுப்பிரமணியன் |
| Age | 76 | Village – | போடிநாயக்கனூர் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.07.2026.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.15 ஆவணத்தை பற்றி என்னுடைய வழக்குரையில் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. வா.சா.ஆ.15 ஆவணத்தின் அசல் ஆவணம் எங்குள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. வா.சா.ஆ.15 ஆவணத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தற்போது சரியாக நியாபகம் இல்லை. வா.சா.ஆ.15 ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் சாட்சியமளிக்கும் போது இந்த ஆவணத்தை குறித்து கேள்வி கேட்கப்பட்டதால் தாக்கல் செய்துள்ளேன். அதன் பின்பு இந்த ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. நான் இதற்கு முன்பு சாட்சியமளித்தபோது வழக்குரை சொத்தை எனது கணவர் கிரையம் வாங்கியிருந்தார் என்று சாட்சியமளித்தேன் என்றால் சரிதான், நான் தவறாக சாட்சியமளித்துள்ளேன்.

2. வா.சா.ஆ.15 ஆவணத்தில் எனது மாமனாருக்கு விற்பனை செய்த தேவசுப்பையாவின் ஈடு கடன்களை தீர்த்தால் தான் எனது மாமனாருக்கு சொத்தில் முழு உரிமை கிடைக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தேவசுப்பையாவின் ஈடு கடன்களை எனது மாமனார் செலுத்தி ரசீது பெற்றுள்ளரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமனாருக்கு எனது கணவர் ராமசுப்பிரமணியனும், சரசா என்பவரும் சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ல் சொல்லப்பட்டுள்ள சொத்தை பொறுத்து சரசாவிற்கும் சரிபாதி உரிமை உள்ளது என்றால் சரிதான், சராசாவிற்கு திருமணத்தின்போது சீர்வரிசைகள், பணம் மற்றும் நகை கொடுத்து செட்டில் செய்துவிட்டோம். நாங்கள் சரசாவிற்கு செய்ததது அனைத்தும் சடங்கு சம்பிரதாயங்கள் என்றும், அது சராசாவின் சொத்து உரிமையை

கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

3. எங்கள் வீட்டின் தலைவாசல் மேற்கு பக்கம் தெற்கு பகுதியில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15 ஆவணத்தில் எங்கள் வீட்டின் தலைவாசல் கிழமேல் 3. 5/8 அடி, தென்வடல் மேற்கு பக்கம் 4 ¼ அடி, கீழ்புறம் ஏசலாக தென்வடல் 6 ½ அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தலைவாசலுக்கு கிழக்கு பக்கம் உள்ள பகுதியை தான் எனது மாமனார் வா.சா.ஆ.15 ஆவணம் மூலம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு திசை விபரங்கள் சரியாக தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.15 ஆவணத்தில் தெற்கு நான்குமாலாக K.P.திலகர் மனையும், 2 வது லக்க வழிநடையும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழிநடைபாதைக்கு சொல்லப்பட்டுள்ள நான்குமாலில் தெற்கு நான்குமாலாக சௌடம்மன்கோவில் தெரு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.15 ஆவணத்தில் தெற்கு பக்கமுள்ள சுவர் உரிமையை பற்றி சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.15 ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு சொத்தில் முழு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.15 ஆவணம் பற்றி வழக்குரையில் எதுவும் சொல்லப்படவில்லை என்பதால் அதனை குறித்து நான் அளித்துள்ள சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Take down by me in the open Court and read over to the witness admited by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.07.30 16:02:58 +0530

District Munsif,
Bodinayakanur.